# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:........................................................... நேரம்: 90 மணித்துளிகள்

www.tamiledc.com

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

தமிழரின் பண்பாட்டு வரலாறுபற்றிக் கூறும் நூல்
சிலப்பதிகாரம் .
(சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை)

1. கூத்துகள் ________________ இரவில் தொடங்கி விடியவிடிய நடைபெறும்.
(முன், பின், நடு)

2. நாம் பிறருடைய பொருளை எங்காவது கண்டெடுத்தால் அதை ______________________ சேர்க்க வேண்டும்.
(பெரியவரிடம், உரியவரிடம், பெற்றோரிடம்)

3. நாங்கள் ______________________ வீடு அழகானது.
(கட்டிய, எழுதிய, அனுப்பிய)

4. பெரியம்மா அடுத்த மாதம் ஊருக்குச் ____________________ .
(செல்வார், சென்றார், செல்கிறார்)

5. ஔவையாருக்கு நெல்லிக் கனியைக் கொடுத்த மன்னன்
____________________________ .
(பண்டாரவன்னியன், அதியமான், சங்கிலியன்)

6. கலைச்செல்வன் பிறந்தநாள் விழாவிற்காக ______________ ஒன்றை எழுதினான்.
(கதை, அழைப்பிதழ், நாடகம்)

7. மழைகாலத்தில் முகில்கள் ______________ த் தெரியும்.
(பசுமையாக, வெண்மையாக, கருமையாக)

8. பின்வருவனவற்றுள் காய்கறி ______________ .
(பலா, வெண்டை, மா)

9. சிறுமி உணவுப்பண்டங்களுடன் ______________ வீட்டுக்குச் சென்றாள்.
(பாட்டியின், பாட்டனின், மாமாவின்)

10. இலையுதிர்காலத்திற்கு அடுத்து வரும் காலம் ______________ .
(கோடைகாலம், பனிகாலம், இலைதளிர்காலம்)

11. 300 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .
(முண்ணூறு, முன்னூறு, முந்நூறு)

12. அதியமான் என்னும் மன்னன் ______________ ஆண்டான்.
(போரூரை, தகடூரை, கடலூரை)

13. தண்ணீர் ______________ என ஓடியது.
(கலகல, சலசல, மடமட)

14. **ஒலிவட்டு :-**

மோசிகீரனாருக்கு விசிறி வீசிய மன்னன்

____________________ .

(சங்கிலியன், பண்டாரவன்னியன், சேரமான்)

15. வீட்டுக்கு வரும் விருந்தினரை நாம் ____________________ வரவேற்க வேண்டும்.

(சினத்துடன், வெறுப்புடன், அன்புடன்)

16. பூச்சாடி என்பதைப் பிரித்து எழுதினால் ____________________ .

(பூ + சாடி, பூச் + சாடி, பூஞ் + சாடி)

17. 'அடங்காப்பற்று' என்று அழைக்கப்பட்ட ஊர்

____________________ .

(யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வன்னி)

18. ஔவையார் இயற்றிய நூல்களுள் ஒன்று ____________________ .

(நாலடியார், நல்வழி, திருக்குறள்)

19. ஒளி என்பதன் எதிர்ச்சொல் ____________________ .

(பகை, புகழ், இருள்)

20. 'பொதுமறை' என்று அழைக்கப்படும் நூல்

____________________ .

(மூதுரை, திருக்குறள், கொன்றைவேந்தன்)

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குடுகுடு | மடமட | கீச்கீச் | படபட | நறநற | ~~சொரசொர~~ |

**எ - கா**

அப்பாவின் கை சொரசொர என்று இருந்தது.

1. பாட்டி ____________ என நடந்து சென்றார்.

2. தாயைக் கண்ட பறவைக் குஞ்சு ____________ எனக் கத்தியது.

3. நான் தாகத்தினால் இளநீரை ____________ எனக் குடித்தேன்.

4. அண்ணா சினத்தால் பற்களை ____________ என்று கடித்தார்.

5. வேடனைக் கண்ட புறாக்கள் தம் சிறகுகளைப் ____________ என அடித்து மேலே பறந்தன.

புள்ளிகள் 05

## 3) பார்த்து உறுப்பமைய எழுதுக.

ஒற்றுமையே என்றும் உயர்வு தரும்.

____________________________________

புள்ளிகள் 03

**4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

**எ - கா**

பண்டாரவன்னியனுக்கு நடுகல் நாட்டப்பட்டது.

1. ஔவையார் அதியமானின் உயர்ந்த குணத்தைப் ____________________ .

2. நாம் நல்ல பழக்கவழக்கங்களைப் பழக ____________________ .

3. திருவள்ளுவரால் திருக்குறள் ____________________ .

4. பனைமரத்தில் இருந்து பல பயன்கள் ____________________ .

5. **பழமொழி :-**

   ஒன்றுபட்டால் உண்டு ____________________ .

6. எனது நண்பன் நாளை தாயகத்தில் இருந்து விண்ணுந்தில் ____________________ .

புள்ளிகள் 12

**5) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொற்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரைந்து | சேர்ந்து | சுவையாக | ~~நெருங்கிய~~ | பிடிக்க | காட்டும் |

**எ - கா**

காவியாவும் இனியாவும் நெருங்கிய நண்பிகள்.

1. நாங்கள் அம்புக்குறி __________ வழியே செல்ல வேண்டும்.
2. அம்மா காய்ச்சிய ஆடிக்கூழ் __________ இருந்தது.
3. என் நண்பி ஓவியம் __________ அனுப்பினாள்.
4. சிறுவர்கள் ஒன்று __________ விளையாடினர்.
5. பூனை எலியைப் __________ ஓடியது.

புள்ளிகள் 05

6) **கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | டி | ப் | பி | ற | ப் | பு |
| கா | பு | த் | தா | ண் | டு | ர |
| ர் | ஆ | சி | த் | தி | ரை | ட் |
| த் | வ | X | ஆ | டி | X | டா |
| தி | ணி | ந | த் | தா | ர் | தி |
| கை | தை | ப் | பொ | ங் | க | ல் |
| ந | வ | ரா | த் | தி | ரி | மா |
| பி | ற | ந் | த | நா | ள் | சி |

| **கொண்டாட்டங்கள்** | **மாதங்கள்** |
|---|---|
| **எ - கா** | |
| பிறந்தநாள் | கார்த்திகை |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |

புள்ளிகள் 10

**7) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| பல் | மதித்து | படிப்பிலும் |
| ~~பழக்கங்கள்~~ | ஆடைகளை | காய்கறிகளையும் |

ஒளிநிலா மிகவும் நல்ல சிறுமி. அவளிடம் நல்ல பழக்கங்கள் ______ உண்டு. அவள் எப்போதும் தூய்மையாக இருப்பாள். தூய்மையான __________ அணிவாள். ஒளிநிலா கீரை வகைகளையும் __________ உணவில் சேர்த்துக் கொள்வாள். ஒவ்வொரு நாளும் பழங்கள் உண்பாள். அவள் __________ துலக்கிய பின்னரே படுக்கைக்குச் செல்வாள். ஒளிநிலா மூத்தோரை __________ நடப்பாள். பிறருக்கு உதவி செய்யும் பண்பும் உடையவள். அவள் __________ கெட்டிக்காரி.

புள்ளிகள் 10

8) **மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.**

**எ - கா**

வந்து / விரட்டினர் / அயலவர்கள் / நரியை

அயலவர்கள் வந்து நரியை விரட்டினர் .

1. விளையாடினர் / மகிழ்ச்சியாக / கடற்கரையில் / சிறுவர்

_______________________________________ .

2. பாடல்கள் / இருக்கும் / கூத்துப் / கேட்க / இனிமையாக

_______________________________________ .

3. சென்றான் / ஊருக்குச் / இனியன் / பேருந்தில்

_______________________________________ .

4. கற்போம் / நல்ல / தேடிக் / நாங்கள் /நூல்களைத்

_______________________________________ .

5. புலவர் / சிறந்த / தமிழ்ப் / ஔவையார்

_______________________________________ .

புள்ளிகள் 10

**9) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பறவைகள் பல வண்ணங்களில் காணப்படும். பறவைகள் ஒன்று சேர்ந்து வானத்தில் பறக்கும்போது அழகான கோலம் போன்று காட்சி அளிக்கும். பறவைகளின் ஒலி கேட்பதற்கு இனிய இசை போன்று இருக்கும். மிகவும் உயரத்தில் பறக்கும் பறவை பருந்து. கழுகு பறவைகளில் மிகவும் பெரியது. மயில், கிளி போன்றன அழகான பறவைகளாகும். ஆண் மயிலுக்கு அழகிய தோகை உண்டு. தமிழீழத்தின் தேசியப் பறவை செண்பகம்.

**எ - கா**

எவை பல வண்ணங்களில் காணப்படும்?

பறவைகள் பல வண்ணங்களில் காணப்படும் .

1. பறவைகளின் ஒலி கேட்பதற்கு எது போன்று இருக்கும்?

   ________________________________ .

2. மிகவும் உயரத்தில் பறக்கும் பறவை எது?

   ________________________________ .

3. எது பறவைகளில் மிகவும் பெரியது?

   ________________________________ .

4. எதற்கு அழகிய தோகை உண்டு?


   ________________________________ .

5. தமிழீழத்தின் தேசியப் பறவை எது?

   ________________________________ .

புள்ளிகள் 10

10. படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15